Registered At The G. P. O Colombo As A Newspaper.

# திராவிடன்

# THE DRAVIDAN.

A Monthly Newspaper.

"சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி."

**சந்தா விளம்பரம்.**

தபாற்செலவின்றி வருஷம் ஒன்றுக்கு ரூ. 1-00
தபாற்செலவு உட்பட ,, ,, ரூ. 1-25
மலாய்நாட்டிற்கு ,, ,, ரூ. 2-50
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்
தனிப்பிரதி 10 சதம்.
முற்பணமாகவே அனுப்பவேண்டியது.

**விளம்பர விகிதம்.**

| | |
|---|---|
| 1 கலம் முதன்முறை | ரூ. 4 50 |
| ¾ ,, ,, | ரூ. 3 00 |
| ½ ,, ,, | ரூ. 2 50 |
| ¼ ,, ,, | ரூ. 1 50 |

அடுத்தமுறைகளில் ½ வாசி
சில்லறை விளம்பரங்களுக்கு ரூபாத்தொகை முற்காசு கட்டவேண்டும்.

புத்தகம்—2. { யாழ்ப்பாணம்-சுன்னாகம்:-விபவஹு சித்திரைமீ உஉ (1928 மேமீ 4) வெள்ளிக்கிழமை. } இலக்கம்—3.

உ
கடவுள் துணை.

அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமா
யானந்தபூர்த்தியாகி
யருளொடுநிறைந்ததெதுதன்னருள்வெளிக்குளே
யகிலாண்டகோடியெல்லாந்
தங்கும்படிக்கிச்சைவைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெதுமனவாக்கினிற்
றட்டாமனின்றதெதுசமயகோடிகளெலாந்
தந்தெய்வமெந்தெய்வமென்
றெங்குந்தொடர்ந்தெதிர்வழக்கிடவுநின்றதெது
வெங்கணும்பெருவழக்காய்
யாதினும்வல்லவொருசித்தாகியின்பமாய்
யென்றைக்குமுள்ளதெதுமேற்
கங்குல்பகலறநின்றவெல்லையுளதெதுவது
கருத்திற்கிசைந்ததுவே
கண்டனவெலாமோனவுருவெளியதாகவும்
கருதியஞ்சலிசெய்குவாம்.

## யாழ்ப்பாணம் தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம் சுன்னாகம்.

கீழ்க்கண்டிருக்கும் கனவான்கள் ஷை சங்கத்தின் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொண்டனர்.

1. ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் Sentul F. M. S.
2. ஸ்ரீமான் A. நீலப்பிள்ளை அவர்கள் கரவெட்டி.
3. ஸ்ரீ K. S. குமாரசுவாமி அவர்கள் புலோலி.

## புதுவருட சோபனம்.

செய்ய விபவதனிற் செய் புவனந் தான் விளையும், பெய்யுமழையெங்கும் பெருகுமே—ஐயமின்றி, மிக்கசுகம் பெறுவா மேதினியோர் வேந்தற்குத், தக்கவபிமான முண்டுதான்.

இராசாக்களின் அபிமானத்தையே முதன்மையாகக் குறிக்கின்றது. முன் மழை குறைவும் பின்மழை அதிகமும் பயிர்களின் செழிப்பும் பிரமகுலத்தினரின் சஞ்சலமும் அரசகுலத்தினர்க்குக் கேடும் வைசியகுலத்தினர்க்கு விர்த்தியும் சூத்திரர்க்குச் சுகமுமுண்டாம் இவைகளே புதிய வருடத்தின் பிரதான பலன்களென க்குறிக்கப்படுகின்றன.

## உணவை விரும்பும் விக்கிரகம்.

விஜயநகரத்தை அடுத்த மங்களகிரியில் நரஸிம்மஸ்வாமி விக்கிரகம் ஒன்றிருக்கின்றனவாம். அது மிகவும் பெரியது. அவ் விக்கிரகத்தின் வாய் திறந்துகொண்டிருக்கிறதாம் திறந்திருக்கும வாயில் நாம் ஆராதனைக்குக் கொண்டுபோகும் எப் பொருளையும் எவ்வளவுவேண்டுமானாலும் ஸமர்ப்பிக்கலாம் ஸமர்ப்பித்து முடிந்ததும் நாம் ஸமர்ப்பித்த பொருளில் சரியாகப் பாதியளவு வாயினின்றும் வெளிவந்துவிடுகின்றது. அளவாகச் சரிபாதியே வெளிவருகிறதா மென்பதைப் பரிசோதிக்க நானுவித பதார்த்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டும் அளவெடுத்தாற்போலச் சரிபாதியே வெளிவருகின்றது. இவ்விஷயங்களில் நம்பிக்கையில்லாத மேனாட்டுப் படிப்பாளி ஒருவன் இதைப்பரிசோதிக்கும் பொருட்டு குல்கந்து நிறைந்த தகர டப்பா ஒன்றைச் ஸமர்ப்பித்தான் அந்த டப்பா அளவாகப் பாதி கத்தரித்து வெளிவந்தது நிறையும் சரிபாதியாகவே யிருந்ததாம். திமிர்கொண்ட ஒரு ஐரோப்பிய றெயில்வே உத்தியோகத்தன் தன்கையை இவ்விக்கிரகத்தின் வாயில் வைத்தான். கையை வெளியே எடுக்க முடியவில்லை. ஆனால் தன்கையை யாரும் பிடித்துக் கொள்ளவில்லையென்று சொன்னான். ஆறுமணிநேரம் அவ்வாறே இருந்தபின் சுற்றிலிருந்தவர்கள் சொன்ன பிரகாரம் அபராத காணிக்கை செலுத்திக் கையை மீட்டான். அவனது அகம் பாவமும் அடங்கிற்று. இதைவிடப் பெரிய மர்மம் யாதெனில் உள்ளேபோகும் பாதிவஸ்துக்கள் என்னவாகின்றன என்பதும் எங்கே செல்கின்றன என்பதுமேயாம். உள்ளே சென்றதையோ எடுக்க முடியாது தொண்டைக்குக்கீழ் ஒரு குழியிருக்குமானால் அது பாதாள உலகம் வரையிற் சென்றிருக்கவேண்டும். ஏனெனில் ஒவ்வொருதினமும் மணங்குக்கணக்காய் சமர்ப்பணம் நடக்கின்றது. மற்றும் உள்ளேபோகும் வஸ்துவிற் பாதியை எப்படி உள்ளே விடாமல் வெளியே தள்ளுகிறது? இம்மர்மத்தை எப்படிக் கண்டறிவது?

## 23 அங்குல உயரமுள்ள பெண்.

உலகத்தில் மிகச்சிறியதாயார் ஹலந்து தேசத்திலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரில் இருக்கிறாள். அவளுடைய உயரம் 23 அங்குலமேயாகும். இப்பொழுது அவளுக்கு வயது 47 ஆகிறது. அவள் பூரண சௌக்கியத்துடன் சந்தோஷ வாழ்க்கை நடத்துகிறாள். அவளுடைய புருஷன் சிங்கங்களைப் பிடித்துப்பழக்குபவர், இவர் எல்லாரையும் போலச் சாதாரணமனிதரேயாவர் இவரின் உயரம் 5 அடி 5 அங்குலமேயாம். இந்த அதிசயமான குடும்பத்திற்கு 24 வருஷத்துக்குமுன் ஒரு பெண் குழந்தை பிறந்தது. இக்குழந்தையைப் பார்ப்பதற்கு 200 விஞ்ஞானப் புலவர்கள் வந்தார்களாம். குழந்தை சாதாரண குழந்தைபோலவே யிருந்தது. பின்னர் வளர்ந்தது. அப்பெண் இரண்டு குழந்தைகளைப் பெற்றிருக்கின்றனள். இவளின் தாயும் குழந்தைகளின் பாட்டியுமே இந்த 23 அங்குல உயரமுள்ள பெண்ணேயாவள்.

## கறிப்பாத்திரத்தில் குழந்தை விழுந்தமை.

சென்ற சில நாட்களுக்குமுன் வெள்ளவத்தையில் ஓர் குடும்பத்தில் இரண்டு வயதுள்ள குழந்தையொன்று குழம்புக்கறி கொதித்துக்கொண்டிருந்த பாத்திரத்தில் விழுந்ததும் அது அக்குழந்தையைக் கடுமையாகச் சுட்டு விட்டது. அப்பொழுது வீட்டில் யாருமில்லையாம். பின் அப்பிள்ளையின் அழுகுரலைக்கேட்ட தகப்பன் ஒடிவந்து குழந்தையை உடனே வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றான். மறுநாட்காலை அக்குழந்தை இறந்துவிட்டதாம். தனிமையாகக் குழந்தைகளை விட்டுத் தாய்மார் வெளியிற் செல்வதினாலே இப்படி நேருகின்றன.

## வள்ளுவவிகடன் எழுதும் நவரசம்.

அவசரபுத்தியுடைய ஒருவனிடத்து அன்பான குணம கிரம்பியிருப்பினும் அற்ப குணமுடைய அவசரபுத்தி யாவையும் மறைத்து எத்தகையோர் மீதும் சந்தேகப் படவைக்கும் சிறிச்சினந்து எதையும் பேசுவதற்குப் பின்னிடாது கடிதங்கள் எழுதச்செய்யும். பின் விஷயத்தை அறிவதற்கு முன்னமே விஷயம் உண்மையெனக் கொண்டு கண்டபடி தூற்றத் தொடங்கிக் கொள்ளும் அவசரப்புத்தியினருக்கும் அன்புக்கும வெகுதூரம். இந்த அவசர புத்தியினர்களின் சகவாசமில்லாமலே விலகிக்கொள்வதுதான் மரியாதைக்குரிய வழி. அவசர புத்திக்காரன பணம் படைத்தவனாயிருக்கலாம். அவன் வாசல்வரைக்கும் அவன் பெருமை முளக்கிக் கொள்ளட்டும். அதை ஒரு பொருட்டாக எண்ணி அவனை லக்ஷியம செய்யப் போவதில்லை. அவனின் அவசரபுத்தி யொழிந்து என்றைக்காயினும் நல்வழிக்குத் திரும்பினானென்று அறியப்படின் அப்பொழுது கூட அவனிடம் புத்திரா கவே பழகவேண்டும். எவ்வளவு இழிவுபடுத்தி யெழுதுகின்றானோ அவன் மூடத்தனம் அவ்வளவும் வெளிப்படும்.

* * *

ஒவ்வொருவனுந் தான்தான் புத்திக் காரனென்றும் பிறருக்கு ஒன்றுந் தெரியாதென்றும் தன்னையே புகழ்கின்றான். பிறருமப்படியே தன்னையும் நினைப்பார் என்பது அவனுக்கு நினைவில் வரட்டும்.

* * *

நகைப்பைத்தியங் கொண்டுள்ள பெண்கள் அதைவிட பிறத்தியார் அணிந்திருக்கும் சேலைகளைப்போல் தமக்கும் வாங்கித் தரும்படிக்குத் தாய் தந்தையர்களையோ சகோதரர்களையோ கணவர்களையோ அவைகளை வாங்கித் தரும்படி சொல்லிப் பைத்தியம் கொண்டாடுகின்றார்கள். இதைக்கண்ட கணவன் என் செய்வான்? கடைப்பட்டுத்தேடிய பணத்தைக் கொடுத்து ஏதாவது நீடித்திருக்கக்கூடிய நல்ல சேலையை வாங்கி வந்தாலும் அது அவர்களுக்குப் பிடிக்கிறதில்லை. அவர்கள் தாமே கடைகளுக்கு நேரில் போய்ப் பார்க்கவேண்டுமென்று வாதம் பண்ணுகின்றார்கள். இவர்களின் நாகரீகம் மெல்லிய துணிகளின்மேலே செலகின்றன. முடிவில் நிர்வாணமான அரசனின் கதைபோல் வருமென்பதற்கையமில்லை.

* * *

முதற்கண் நல்லார் தள்ளற்பாலது கொடிய செய்கையாய்க் கொலையொன்றே? பாவுகின்றனை? கொலைசெய்து ஒரு அரிய உயிரைத் தொலைத்தல் மறச்செய்கையாம்? அம்மறத்தொழிலைக் கொண்டு ஒழுகுவோமாயின் அறக்கடவுளை அடைதல் இயலாதொன்றும் ஆனல் ஒருசாரார் தமக்கு நன்மை உண்டாவதாயின் உயிர்களைக் கொல்லலாம் என்று கூறுகின்றனர். அருளுடையாரும் உயர்ந்த வகுப்பாரும் இப்படிக் கூறிக்கொண்டால் ஏழைப் பிராணிகள் மீது இரங்குவதுயார்.

* * *

உலகில் எல்லோரும் நல்லவரேயாவர் படித்தவனிலும் மடையனிருக்கிறான். படியாதவனிலும் புத்தியுடையவனிருக்கிறான். ஒருவனையும் நண்பனாக ஏற்றுக்கொள்ளாதே. அவன் உண்மையிலே நல்லவனாயிருந்தால் நன்மை யடைவான் நீயே நல்லவனென்று நினையாதே உனக்கும் வல்லவனொருவனிருப்பான்.

* * *

வகுப்பும் வித்தியாசமும் என்னுங் கொள்கை உலகமெங்கணுமகாணப்படுங்கொள்கை. இந்தியா இலங்கை பென்னும் தேசங்களிலேயே இம்முறை பெரிதும் வன்கண்மை யுடைய தெனப்படுகின்றது. இருந்தும் காலத்துக்கேற்றகோலமென்றபடி இக்கொள்கைகள் தலைகாட்டாது மறைந்து கொண்டே வருகின்றது. இன்னுங்கால கதியில் ஒழிந்து கொண்டே வருமென்பதற்கையமில்லை. 'மெல்லனப்பாயுந் தண்ணீர் கல்லையும் உருவிப்பாயு'மென்பதை உணராத நம்மவரிற் சிலர் வனத்தைச் சுட்ட குரங்கென்ற பான்மையாக வேஷ வெள்ளையடிக்கத் தொடங்கி வீண்வாய் பசப்புகின்றனர். பாருங்கள் நம்மூரில் 20 வருஷங்களுக்குமுன்னாக மலகூடங்களில் வேலை செய்து வந்தவர்கள் தம் ஒழுக்கத்தைக் கருதி செல்வாக்குடன் சிவிக்கின்றனர். இவர்களைக் காணும் போது யாருக்கும் சந்தோஷம். இது மாதிரி எத்தனையோ விஷயங்கள் திருந்தி வருவது உண்மை,

## தாழ்த்தப்பட்டவர்களின் சுதந்தர சூரியோதயம்.

ஓ, தாழ்த்தப்பட்டவர்களே! உங்களைச் சூழ்ந்துள்ள :அடிமையின் பார்ப்பனச் சுயநயப் பசாசுக்கள் விட்டு நீங்குகின்றது.

தற்காலத்துள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும விடுதிகளிலும் இருக்கச் சமாசனம் கொடுத்து வித்தியாசங் காட்டாது நடத்தி வரும்படி சற்ற வித்துவான்களிற் சிலர் எழுந்து வாதாடுகின்றனர். இவர்களின் முயற்சிகள் கைகூடும்போலும்.

இன்னும் ஆலயங்களிற் சென்று கடவுளைச் சுயேச்சையுடன் வணங்க எல்லோர்க்கும் உரிய உரிமையை நிலைநாட்டவும் ஏற்பாடு செய்துவருகிறார்கள். சில விடங்களிலே இத்தாழ்த்தப்பட்டவர்களைக் கோவிலுக்குட் சென்று சாதிவித்தியாசமின்றிக் கடவுளை வணங்கவும் ஒழுங்குசெய்திருக்கிறார்கள். இவ்வாறே, வரப்போகுங் காலங்களிலும் தாழ்த்தப்பட்ட சாதியாரிற் காணப்படும் அடிமையின் இருள் நீங்கிச் சுதந்தரமாகிய சூரியன் பிரகாசிக்கப் பலகலைகற்ற வல்லுனர்களும் பெரியோர்களும் உதவிபுரிவார்களாக. —சுபம். K. N.

## இந்துமதப் பிரவேசம்.

ஐயா,

சென்ற 1917ம் ஆண்டு கிறீஸ்து மார்க்கத்தில் தேவதாசனெனப் பெயர்புனைந்து எனது மனைவியும் மகளும், அமெரிக்கன் மிஷன் தெல்லிப்பழைச் சபையிற் சேர்ந்தினபிற்பாடு சபையின் நடபடிகள் கொள்கைகள் எனக்குப் பிடியாமையால் மேற்படி சபையையும் கிறீஸ்து மார்க்கத்தையும் விட்டு விலகி, நிகழும் விபவஹு சித்திரைமீ 11உ (21-4-28) திங்கட்கிழமை கீரிமலையில் பிராயச்சித்தம்செய்து, சிவதாசனென நாமம்பூண்டு குடும்பத்துடன் இந்துமதப்பிரவேசஞ் செய்துகொண்டேனென்பதை யாவரும் அறியும்பொருட்டு வெளிப்படுத்துகின்றேன்.

23-4-28 இங்ஙனம்.
தெல்லிப்பழை, க. சிவதாசன்.

## உபாயசிங்கன் கதை.

இப்பூச்சக்கரத்தின்கண் உள்ள பஞ்ச கண்டங்களுள் ஒன்றான ஆசியாக் கண்டத்துக்குத் தக்கணபாகமாய் உத்தராட்ச ரேகைகள் ஆறும் பத்தாம் பாகைகளுக்கிடையில் வங்காளக்குடாக் கடலில் மாயாதீப மென்றோர் தீவுளது. இத்தீவின் உத்தரகுட பாகமாய் அந்தரப்புல மென்றோர் குடாநாடுளது. இற்றைக்கிரண்டாயிரம் வருடங்களின் முன்னர் அங்க, வங்க, குலிங்க, கலிங்க, காஸ்மீர, மகத, குமுத, மாளுவ, சாளுவ ஆதியாம் 16 தேசங்களுள் ஒன்றான மகத்துவநகரியொன்றிலிருந்து இவ்விடம் குடியேற்றப்பட்டதென்றும், கம்பர் இராமாயணத்திற் கூறிய சம்பவங்கள் சில இவ்விடம் நிகழ்ந்த தென்றும் பாரம்பரைக் கதையுண்டு.

இத்தேசத்தை யாண்ட செகராசசேகரன் காலத்தில் இவ்வூர் பட்டபாட்டையும் கெட்டகேட்டையும் மற்றுங் கஷ்டங்களையும் இஷ்டமாய் எடுத்துரைக்க எமது தூவல் (பேனா) நடுங்குகின்றதே.

இவ்வரசனோ வஞ்சமன நெஞ்சமொடு நஞ்சுநிறை நீசன். ஏழை எளியோருக்கு நிஷ்டூரஞ் செய்யும் படுபாவி. அரசனெப்படியோ குடிகளுமப்படி யென்ற பழமொழிப்படி இவ்வரசனின்கீழ் உத்தியோகம் பார்க்கும் மணியம் விதானை உடையார் முதலியோர் வெந்த வீட்டிற் பிடுங்கின தறுதி யென்றாற்போல அறியாமட்டிச் சனங்களிடம் தட்டிப்பறித்துக் குடிசனங்களைக் குட்டிச்சுவராக்கும் உருத்திராட்சப் பூனைகளாயிருந்தனர். இவ்வரசன் முடிதரித்த எட்டாம் வருடம் எட்டாம் மாதம் எட்டாந் திகதி மேற்கூறிய அந்தரப்புலநாட்டிற்கு குளிர்ந்துகொல்லி முதலியாரும் சடகோபாலசூரியரென்னும் மணியமும் ஆதிமூலஅண்டப்புரட்டனென்னும் புழுதிவிதானையும் வஞ்சகபூரணனென்னும் தந்தரஉடையாரும் நாட்டாண்மைக்காரராய் நியமிக்கப்பட்டனர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# திராவிடன்.

கன்னாம்:— 1928,

சித்திரை மீ 22உ வெள்ளிக்கிழமை.


கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க, முன்னின்று பின்னோக்காச் சொல். குறள்.

## தூக்கிவிடுகிறோம்!

யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்டவர்களைக் கைகொடுத்துத் திடீரெனத் தூக்கிவிடுவதற்குத் தாழ்த்தப்பட்டவர்களினின்று உயர்ந்த சிலரும், உயர்ந்தவருட் சிலரும் முன்வந்திருக்கின்றார்களென அறிகின்றோம். இவர்கள் நின்று ஊழியம் புரிவதற்கு அரங்காக அமைந்துள்ளது ஒடுக்கப்பட்டவர்களின் ஊழியசங்கம் என்னும் ஓர் சங்கமாகத் தெரிகின்றது. இச்சங்கத்தில் மார்க்கவேறுபாடில்லையெனச் சொல்லப்பட்டாலும் அதற்குத் தலைமை வகித்து மும்முரமாய் வேலைசெய்பவர்கள் கிறித்தவர்களாகவே காணப்படுகின்றனர். தாழ்த்தப்பட்டவரிற் பெரும்பாலாரை கிறிஸ்தவர் தம்மதத்திற் கூட்படுத்திவருவது இரகசியமல்ல. இச்சங்கமும் சமயவேட்டம் புரியும் விரகாகுமோவெனச் சிலர் ஆலோசிக்கின்றனர்.

தாழ்த்தப்பட்டவருள் ஒருவர் நின்று தாழ்த்தப்பட்ட தம்மவர்களை முன்னேற்றும் வழியில் விரைவுடன் முயன்று வர அவருக்கு மேலால் இன்னுஞ் சில உயர்குலத்தவர் முதன்மை வகித்துள்ளார்கள். இவர்கள் சொல்லுவதென்ன ஒடுக்கப்பட்டவர்கள் உயர்வடைய வேண்டுமானால் அவர்களுக்காக சட்டசபைக்கு ஒரு 'மெம்பர்' (அங்கத்தவர்) போகவேண்டுமென்பதேயாம். இது எப்படி இருக்கிறதென்றால், ஆற்றக்கப்புறத்தில் ஓர் செத்தமிருகம் இருக்கிறதென வறிந்த நரி அவ்வாற்றில் வாசஞ்செய்த முதலையுடன் சிநேகம்பண்ணி "ஆற்றக்கப்புறம் ஓர் அழகான பெண் முதலை இருக்கிறது; நீ என்னை அக்கரையில் கொண்டுபோய் விடுவாயாயில் நான் எப்படியும் அதனை உனக்கு மனைவியாகச் செய்வேன்" என்று சொன்னது இதனை மெய்யென்று நினைத்த முதலை அந்நரியை முதுகில் ஏற்றி அக்கரையில் விட்டது. அது இறந்த மிருகத்தின் இறைச்சியை வயிறாரத் தின்றுவிட்டு வந்து அந்தப் பெண் முதலை கொஞ்சம் சம்மதப்படுகிறது; எப்படியும் இரண்டு மூன்று நாளையில் முடிவு செய்துவைப்பேனெனச் சொல்லி மிருகத்தைச் சாப்பிட்டு முடிந்தவுடன் அம்முதலையைப் பகிடிபண்ணினதாம். சட்டசபை ஒருபுறமிருக்க நம்மவரை முன்னேறச் செய்யவேண்டுமென்று பாடுபடும்பிரபுக்கள் நம்மவர்க்கு இவ்வளவுஞ் செய்த உபகாரமென்ன? இப்பொழுது செய்ய வாராதது சட்டசபைக்குப் போய் வரப்போகிறதா? சட்டசபைக்குப் போவதற்காகத்தான் ஒடுக்கப்பட்டவர்களைக் கிளப்பிவிட்டுக்கொண்டு நிற்கிறார்களெனச் சில கிழவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். கடுதாசியில் எழுதினதினாலும் பிரசங்கமேடையில் ஏறிப்பேசினதினாலும் நாம் முன்னேற்ற மடைந்துவிடமாட்டோம். வெறும் சிலுசிலுப்பைக் கண்டு நாம் வெருண்டுவிடுதல் கூடாது.

எதுவும் அநுட்டானத்தில் வரவேண்டும். அநுட்டானத்தில் வாராத ஞானம் பயனற்றது. சைவர்கள்தான் ஒடுக்கப்பட்டவரின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கிறார்களென்றும் கிறித்தவர்கள் அதற்கு உதவியாயுள்ளவர்களென்றும் சில கிறித்தவர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கிறித்தவர்கள் சாதிக் கட்டுப்பாடு முதலியவற்றை அங்கீகரியாதவர்களல்ல. குருமார் நடாத்தும் கொழும்புத்துறைப் பள்ளிக்கூடத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் சேர்ந்து படிக்கக் கூடாது.

இழவாலை ஒட்டகப்புலம் இன்னும் மற்றும் கிறித்த ஆலயங்களில் சாதி கவனிக்கப்பட்டு வருகின்றது. இதனால் சாதிக்கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்பது எமது கருத்தல்ல. தமிழரில் உயர்ந்த வகுப்பினரிலிருந்து வரும் பாதிரிமார் குருமார் ஒடுக்கப்பட்டவர்களிடத்தில் சலபானங்கூடச் செய்யமாட்டார்கள். சன்னிதானத்திலிருக்கும் குருவானவர் குடிப்பது சந்தையிற் கிணற்றில் எடுக்கப்படும் தண்ணீராகும். சைவரில் உயர்குலத்தவர்கட்கும் நம்மவர்க்கும் வித்தியாசம் உண்டாக்கிவிட்டால் கத்தோலிக்கமதத்திலோ புரொட்டெஸ்டான்ட் மதத்திலோ சேர்த்துக்கொள்ளலாமென்பது அவர்கள் கருத்து. ஆதலால் நம்மவரைத் தம்பக்கல் இழுக்கப்பார்க்கும் கிறித்தவர் தந்திரத்துக்கு அகப்படாமல் நடத்தல்வேண்டும்.

பிறர் நம்மை எப்படி உயர்த்த முடியும்? ஒவ்வொருவரும் தத்தம் உயர்வுக்குத் தாமே காலாயிருக்கின்றார்கள். நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும். பிறர் பழிக்கத்தக்க சகுமங்களை நீக்கவேண்டும். ஒடுக்கப்பட்டவர்களென்று சொல்லப்படும் நம்மவர் ஒழுக்கம் நடைகளுக்குத் தக்கவாறு உயர்வாகவும் தாழ்வாகவும் மதிக்கப்பட்டுவருதலை நாமே நேரிற் காண்கின்றோம். நாம் நம்மில் திருத்திக்கொள்வதைவிட்டு பிறர்மேற் குற்றஞ் சுமத்துவது தவறு. காருண்ய ஆங்கில அரசினரின் கீழ் எமக்கு எப்படும் குறைகள்யாதுமில்லை.

## நீயே உன்னைத் தாழ்த்துகின்றாய்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரெனக் கொள்ளப்படும் நம் சகோதரர்காள்! ஒரு தேசத்தார் ஒரு சாதியார் உயர்வடைவதற்கு முக்கிய காரணங்களுள் "ஒழுக்கமே உயர்குலம்" என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து ஒழுகிவருமோமேயாகில், நம்மவரின் கீழான செய்கைகளையும் கீழான பழக்கங்களையும் கண்டித்து நல்வழியில் ஒழுகிவருமோமாகில் நம்மவர்களும் மற்றைய வகுப்பினரைப்போன்று வித்தியாசமின்றிக் கொள்ளப்படுவர் என்பது உண்மை. ஏனெனில், பாருங்கள்: ஒவ்வொருவரும் அருந்தும் ஊண் உடை தேகசுகம் முதலியவைகளை ஒருசிறிதும் சிந்தியாது தம்மனம் போன மட்டுக்கெல்லாம் "மது மாமிசம் ஊன் முதலியவைகளையே புசித்து, மற்றையோரின் முன்பாகப் போவதற்குக் கூசிப் பின்னே பதுங்குவதும், தினமும் ஸ்நானஞ்செய்யப் பழகாமையும், ஸ்நானஞ்செய்யினும் வஸ்திரத்தைத் தோய்த்து உலர்த்தித் தரிக்க விரும்பாமையும் ஆகிய இவைகளைக் கொண்டே மற்றைய சாதியார் நம்மவர்களைப் புறம்பாக மதிக்கவேண்டிவருகின்றது மதுமாமிசம் முதலியன மற்றைச் சாதியினர் அருந்துவதில்லையெனக் கூறவில்லை. அச்செயல் நம் சாதிக்கெல்லாம் இழிவெனக் கண்டும், பெரியோரால் இகழ்ந்தொதுக்கப் படுதலைக் கண்டும், நம்மவர் அச்சியமே முதன்மை யுடையதெனக் கொண்டாடி வருவதுமே துக்ககரமான செயல். நிற்க,

முற்காலத்தில் நம் பெரியோர்கள் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதியும் சனசமூகத்தின் நன்மையைக் கருதியும் ஏற்படுத்திய பல விஷயங்கள் இடைக்காலத்தில் சில சுயநல கோஷ்டியாரால் பாழ்படுத்தி வேறு வித பொருள் கொடுத்துவிட்டபடியால் இக்காலத்தில் அவ்விஷயங்கள் பெருந் தீங்குடையனவாகவே காணப்படுகின்றன. அதாவது தன்னைப் போலவே பிறரையும் எவ்வித வேற்றுமையேனும் உயர்வு தாழ்வேனும் பாராட்டாமல் மனமாரச் சமமாகக்கருதி அவ்வாறே அநுஷ்டித்தும் காட்டுவதே சகோதரத்துவமும் சமத்துவமுமாமென ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வார்களென்பதே ஒரு தலைத்துணிபு. இன்னும் இதனை ஒழிக்கவே மகாத்மா அவர்களின் உபதேசம் தோன்றியதும் யாவருமறிந்த விஷயமே. இருந்தும் நியாயபுத்தியுடைய பலர் நமது நீதியான கொள்கையில் அபிமானமுடையவர்களாய் நம்மவர்களாய் துணைநின்று போராடிவருகின்றனர், சிலர் இது விஷயங்களுக்கு மாறாக இருப்பதும் இயற்கையே. பிறப்பினால்மாத்திரம் உயர்வு தாழ்வு கிடையாதென்பதையும் மக்களுக்கு அறிவுறுத்தவேண்டும்

உலக ரக்ஷகரின் சந்நிதானத்தில் எவ்விதத்தினரும் சமமானவர்களே! நாம் இறைவனின் விசாரணைக்குப் போகும்போது நம்முடைய பாவபுண்ணியங்களும் மனமார்ந்த அநுஷ்டானங்களும் கவனிக்கப்படுமேயன்றி நாம் எந்தச் சாதியின் பெயரால் என்பது கவனிக்கப்படமாட்டாது. மேலும் நல்லவர்களும் கெட்டவர்களும் பத்திமான்களும் அஞ்ஞானிகளும் எந்தச் சாதியின் பெயராலும் வாழ்ந்து வருகின்றனர். ஆதலின் சாதியின் சம்பந்தங்கொண்டு ஒருவரை பொருவர் உயர்வு தாழ்வு பாராட்டாமல் சகோதரத்துவத்தைக் கையாடி வருவதே அறிவுடையோரின் பெருங் கடமையாகும்.

## நல்லாரிணக்கமும் தொண்டரின் பெருமையும்.

பரமகருணாநிதியாகிய கடவுளிடத்து அவர் சந்நிதானத்தில் சாதிவேற்றுமை கொண்டு பரிதாபமாகப் பேசும் அறிவாளர்கள் இரங்குமாறு:

திருத்தொண்டர்களில் திருநாவுக்கரசு சுவாமிகள், இளையான்குடி மாறநாயனர் முதலிய பதின்மூவர் வேளாளர்; இயற்பகை நாயனர், அமர்நீதிநாயனர் முதலிய ஐவர் வணிகர்; திருமூலநாயனர், ஆனாய நாயனர் ஆகிய இருவர் இடையர்; குங்குலியக்கலயநாயனர், முருகநாயனர் முதலிய பன்னிருவர் பிராமணர்; சுந்தரமூர்த்திநாயனர், இசைஞானியார் முதலிய நால்வர் ஆதிசைவர்; சேரமான்பெருமாணாயனர், மங்கையர்க்கரசியார் முதலியவர் அரசர்; திருநீலகண்டநாயனர் குயவர்; திருநீலகண்டயாழ்ப்பாணநாயனர் பாணர்; அதிபத்தநாயனர் பரதவர்; கண்ணப்பநாயனர் வேடர்; ஏனாதிநாயனர் சான்றார்; நேசநாயனர் சாலியர்; கலியநாயனர் செக்கர்; திருக்குறிப்புத்தொண்ட நாயனர் ஏகாலியர்; திருநாளைப்போவார் நாயனர் பறையராவார். இதுபோன்று ஆழ்வார்களும் ஏனைய அடியார்களும் பல திறப்பட்டவர். இதனான் அன்புவடிவாய கடவுள் சாதிவேற்றுமையைப் பார்க்கின்றாரல்லர் என்பதும் அடியார்கள் இன்ன சாதியிற்றான் பிறப்பரென்பதை முடிவு கட்டுதல் இயலாதென்பதும் தெற்றென எவர்க்கும் விளங்கவரும். இதனை வலியுறுத்துமாறு:

"தள்ளிவயிற்றினகிற்பிறக்குமான்வயிற்றி
னொள்ளரிதாரப்பிறக்கும்பெருங்கடலுட்
பல்லில்லயமுத்தம்பிறக்குமறிவார்யார்
நல்லாள்பிறக்குங்குடி."

என்னும் அரிய அறவாக்கு எழுந்ததென்க.

நல்லார்கட்குப் பிறப்பின் இறுமாப்பு இல்லை; அவர்கட்கு ஒழுக்கமும் அன்பும் அருளும் அறமுமே இருக்கவேண்டுமென்பது கருத்து. ஆகவே அவர்கள் பிறப்பைப் போற்றாது அன்பொன்றனையே பெரிதுங் கருதுகின்றார்களாகலின் அவர்கள் "அன்பர் குழாம்" என்றதொரு சாதியிலேதான் அடக்கவேண்டும் வேறு எந்தச் சாதியிலும் அடக்குதல் இயலாதென்க. இதனைப்பொட்டியே வாக்கிற் சிறந்த சேக்கிழார் சுவாமிகள் அன்பு வடிவாய் அப்பூதியடிகட்கு முதற்கண் சாதியைக் கூறுங்கால் பிராமணர் என்று கூறாது, "அன்பர் குழாம்" என்று செம்மையாய்க் கூறிவிட்டாரென்க. ஆகவே இத்துணையுங் கூறியவற்றான் நல்லார்கள், பார்ப்பனர்கள் முதலியோர் இடையில் நாட்டிய சாதிகளில் கட்டுப்படார் என்பதும், இறைவனுக்கும் சான்றோர்க்கும் அறநூல்கட்கும் உவந்த "அன்பர் குழாம்" என்றதொரு உயரிய பகுப்பிற்றான் அடங்குவதென்பதும் காட்டுகின்றாம்.

## ஸ்ரீ சாரதாதேவியின் அம்சமாகிய ஒளவைப்பிராட்டியாரின் அற்புத சரிதை.

வண்ணைநகர் ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை அவர்கள் எழுதியது.

(முற்றொடர்).

சிலம்பியென்னும் தாசியானவள் ஒளவைப் பிராட்டியாரின் அற்புதகவியால் அட்டஐஸ்வரியங்களும் பெற்று வாழ்ந்திருப்பதைக் கேள்வியுற்ற கம்பர், தான் ஐஞ்ஞூறு பொன்பெற்றுப் பாடி ஏழையாக்கிய கணிகை மாதை, ஒளவையார் கூழமுது பெற்றுப்பாடித் திரண்ட ஐஸ்வரியமுடையவளாகச் செய்துவிட்டாரேயென்று குறையெய்தி, கூழுக்குப் பாடிக் குடியைக் கெடுத்தாளென்று வைது, குலோத்துங்க சோழமகாராசனோடு சம்பாஷிக்குஞ் சந்தர்ப்பங்களில், ஒளவையென்பவள் கல்வியறிவுள்ளவளா? அவளுமொரு வித்துவாம்சையா? ஆழமான கருத்தமைந்த கவிபுனையும் வன்மையுள்ளவளா? பிரபலகவிவாணரின் முன்னே எதிர்நிற்கும் ஆற்றல்படைத்தவளா? என உல்லங்கனஞ்செய்து வந்தனர். அரசன் ஓர் நாள் கம்பருடைய உள்ளக்கிடக்கையை, ஒளவையாருக்குக் குறிப்பாலுணர்த்த, அதைச் செவிமடுத்த ஒளவையார், கம்பருடைய போலிப்புலமையைப் புலப்படுத்துமாறு, அரசனை விளித்து, விவேகிகள் இருவர் புகழவேண்டும், விரல்கள் நிறைய இரத்தினங்கள் பதித்த கணையாழிகள் அணிந்திருக்கவேண்டும், அரையிலே அணிய பஞ்சுநூலாடையாயினும், பட்டாடையாயினும் தரித்திருக்கவேண்டும், இப்படியான உன்னதபதவியில ஒருவரிருப்பாராயின், அவர்பாடிய கவிதை விஷத்தை யொத்ததாயினும், மிக்க வளப்பெய்திய பாடலேயாகும், எனனுங்கருத்தமைந்த,

"விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும் [விரல்நிறையமோதிரங்கள் வேண்டும்—அரையதனிற்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டு மவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனு நன்று."

என்னும் வெண்பாவைப் பாடியருளினார். அதைக்கேட்ட அரசன் அகத்தன்னே உவகையுற்று, கம்பரை நோக்கப் பாரகாவியம் பாடுவோர் எவருளரென வியக்க, உடனே ஒளவையார் ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற அக்கணங்குருவியின் கூடும் வன்மையாகிய அரக்கும், கறையானுல் ஆக்கப்படும் வன்மீகமும், ஈயினாலுண்டாக்கப்படும் தேன்கூடும், சிலந்திப்பூச்சியால் இயற்றப்படும் வலயுமாகிய இவைகளை எத்துணை ஆற்றல்படைத்த விற்பன்னரும் இயற்றுதல் அருமையாகும்; ஆதலால் நாம் மிகவும் வன்மையுடையேமென்று தருக்குற்று ஒருபோதும் வன்மை பேசவேண்டாம்; யாவர்க்கும் ஒவ்வோர் காரியஞ்செய்தல் எளிதாகும் என்னுங்கருத்தமைந்த,

"வான்குருவி யின்கூடு வல்லரக்குந் தொல்கறையான்,
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்-யாம்பெரிதும், வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங்காண், எல்லார்க்கு மொவ்வொன் றெளிது"

என்னும் வெண்பாவையும், அதனோடமையாது

"சித்திரமுங் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்-நித்தம், நடையும் நடைப்பழக்க நட்புந் தயவுங், கொடையும் பிறவிக் குணம்."

என்னும் வெண்பாவையும்,

"காணாமல் வேணதெல்லாங் கத்தலாங் கற்றோர்முன், கோணாமல் வாய்திறக்கக் கூடாதே-நாணாமற், பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தாக்காற், கீச்சுக்கீச் சென்னுங் கிளி" என்னும் வெண்பாவையும் பாடியருளினார். அதுகேட்ட அரசன் மனக்குதூகலமடைந்து ஒளவையாருடைய வாக்குச்சாதுர்யத்தை வியந்து விடையளித்தனன். பின் செங்கோலோச்சுகின்ற குலோத்துங்க சோழராசனது, ஜனனதினக் கொண்டாட்டம் வெகு விமரிசையாக நடந்தது. அக்கொண்டாட்டம் நிகழ்ந்த அரசனது அத்தாணி மண்டபத்தின்கண்ணே, வடமொழியில் மிக்க பாண்டித்தியம்படைத்த விப்பிரகுழாமும், முத்தமிழ்க்கலைகளை ஒருங்குணர்ந்த வித்துவகோஷ்டிகளுங் குழுமியிருந்தனர். அப்பெருமை வாய்ந்த மந்தணத்தில் ஒளவைப்பிராட்டியாரும் நர்மருங்கில் வீற்றிருந்தனர். அச்சமுதாயத்திலே ஒளவையாரும் வதிவதைக்கண்ட கம்பர் முன்னரே சிலம்பியென்னும் விலைமகள்மாட்டு நிகழ்ந்த சம்பவத்தில், ஒளவையார் கூழமுதருந்தித் தனக்குவருதற்கேதுவாயிருந்த, ஐஞ்ஞூறு பொன்னையுங் கெடுத்துவிட்டாளே! என்னுங் குரோதங் காரணமாக, இந்த விருத்தவையை இவ்வவைக்களத்தில் ஒருதரமாவது, "அடி" என்றுகூறிப் பெருமையைக் குறைத்துவிடவேண்டுமென்று கருதி, ஆரைக்கீரையில பொருளையமைத்து, ஒளவையாரை விளித்து ஒருகால்அடி! நாலிலைப் பந்தாடி! என விளம்பி மந்தகாசஞ்செய்தனர். அச்சபையில் வைகிய அரசன் முதலிய மகாசனங்கள் யாவரும் வரகவியாகிய ஒளவையாரை இக்கூட்டத்தில் வைத்து கம்பர் ஏனஞ்செய்தாரேயென்று வதனங்கள் புலர்ந்து மௌனமாயிருந்தனர். அதைச்செவியுற்ற ஒளவையார் இவனுடைய கல்விச்செருக்கை அகற்றுவதற்கு இதுவே தருணமென்று மனத்திலுன்னி, கம்பரைப் பார்த்து, அவலக்ஷணமுள்ளவனே! கூற்றுவன் வாகனமாகிய எருமைக்கடாவே! மட்டற்ற கேடுகளுக்குக் காரணமாகிய மூதேவியின் வாகனமாயுள்ள கழுதையே! முழுதுங் கூரையில்லா வீடாகிய குட்டிச்சுவரே! சூரியகுலத்திலவதரித்த ஸ்ரீராமனது அதனுகிய குரங்கே! நீ கூறியதின் பொருள் ஆரைக்கீரையடா என ஓர்கருத்தும், இவ்வித மரியாதையற்ற மாற்றத்தை, ஆரைநோக்கிச் சொன்னுயடா, என மற்றொருகருத்தும் அமையும்படி,

"எட்டேகா லக்ஷணமே யெமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேற்
கூரையில்லா வீடே குலராமன் றூதுவனே
ஆரையடா சொன்னா யடா."

என்னும் வெண்பாவைப் பாடியருளினார். அச்சபையில் வைகிய யாவரும அக்கவியைக் கேட்டுக் கரகோஷஞ்செய்து பரிகசித்தனர். உடனே கம்பருடைய வதனமானது, அம்புலியைக்கண்ட அரவிந்தமலரென வாடியது. அந்நாட்டொட்டுக்கம்பர் ஒளவையார்மீது அவர் அற்றவதையொழித்து, கீழ்ப்படிந்து அன்பு பாராட்டி ஒழுகுவாராயினர். தொடரும்.

## திண்டப்படாதார் பிள்ளைகள் படிப்பும் வைதிகர் எதிர்ப்பும்.

இச்சிலவுலகின்கண் உயிர்கள்வினைக்கீடாகப் பிறந்துழலும பிறவிகள் பல. அவைகளுட் சிறந்தது மக்கட்பிறவி. ஏனைய பிறவிகளில் காணப்படாத ஓர் அறிவு மக்களிற் சிறந்து விளங்குவதால், மக்கட்பிறவி சிறந்ததெனப்பட்டது. "மக்கடாமே ஆறறிவுயிரே, மாவுமாக்களும் ஐயறிவினவே" இவ்வாறுவதறிவுதான் பகுத்தறிவெனப்பட்டது. இவ்வுணர்வைப் பெறாமல் மக்கட்பிறவி தாங்குவோரெவரும் மக்களல்ல இவ்வுணர்வு விளங்கப்பெறாதவனுக்கும் விலங்கினதற்கும் பேதமில்லையெனலாம். இவ்வுணர்வைப் பெற்றவன் தன்னுயிர்போல் மன்னுயிரைப் பார்ப்பன். அவன் தனக்கென வாழான். அன்பு மிரக்கமுமே அவனுள்ளத்தில் குடிகொண்டு நிலவும். பிறப்பில் உயர்வு தாழ்வு என்னும வேற்றுமைதோன்றப்பெறான். இவனே "கண்டவிட மெல்லாங் கடவுண மயமென்றறிந்து" எவ்வுயிருக்குந் தொண்டாற்றி வரும் பெருந்தகையாளன். அவனுக்கு "இலங்கும் உயிர் உடல் அனைத்தும் ஈசன் கோயில்." இத்தகை புணர்வு அடையப்பெற்றோர் மிகச் சிலரே. பெரும்பான்மையோர் மனிதப் போர்வையைத் தாங்கி யிருந்தபோதும், தம்முடம்பையே பொருளாகக்கொண்டு தந்நலத்தைக் கருதி வாழ்ந்துவருகின்றனர். இக்கூட்டத்தாருள்ளமட்டும் உலகிற் சண்டை சச்சரவுகளும் அக்கிரமங்களும், உயர்வு தாழ்வு என்னும வேற்றுமைகளும் பெருகிக்கொண்டேவரும. இவர்களுகி "பகுத்தறிவு" பெற்ற மக்கள பெருகுவரெனக்கானோ அன்றேபல்லுயிரும் இன்பத்துய்த்திலங்க வழியுண்டு.

இனி சைவசித்தாந்தக் கொள்கைகள் அடிப்படையாயுள்ள சைவசமயத்தி னுள்ளோராயும் "எல்லாரு மின்புற்றிருப்பதுவேயல்லாமல் வேறொன் றறியேன்"வரும அன்பேயுருவாகக் கொண்டவருமான அடியார்கள் பலரின் வழித்தோன்றினோராயுமுள்ள தமிழ்மக்கள் தமது சமூகத்தினுள் அந்நியரால் புகுத்தப்பட்ட "சாதி" யென்னும் மக்கட்பிரிவினை முறையைக் கையாண்டு அதனிமித்தம பல கொடுமைகளையும் இடுக்கண்களையும் தம்மினத்தி லோர்பகுதியா

ருக்குப் புரிந்துவருவதைக்காண, உண்மைத் தமிழன் மனம் புண்படுமென்பதற் கையமில்லை அந்தோ! திராவிட வேந்தரில் சிறந்தவனாகிய இராவணனினதும், கலைமகளாம் ஒளவை, பொய்யாமொழிப்புலவர், கபிலர் ஆகியாம் புலவர்களினதும், கற்புக்கரசியாம கண்ணகியினதும், மணிவாசகன், நாவுக்கரசன் ஆகியாம் சைவசமயக் குரவர்களினதும் சந்ததியில் தோன்றிய தமிழ்மக்கட்கிடையிலுமா, தீண்டாமை, பார்க்காமையென்ற கொடுமைகள் நடைபெற்றுவரவேண்டும்! இவர்களதுதங் "குடியுமொன்றே குலமுமொன்றே; இறப்புமொன்றே பிறப்புமொன்றே;வழிபடுதெய்வமுமொன்றே" பேசும மொழியுமொன்றே. அங்ஙனமிருப்ப, கோயில், குளம, கிணறு, பள்ளிக்கூடம், மடம் ஆகிய பொதுநிலயங்களிலும் இவ்வித இடுக்கண்கள் நடைபெற்றுவருவது மனிதனுக் கழகல்லவே.

நமது சமூகத்தைப் பாழ்படுத்திவந்த ஊழல்கள் பலவுள. அவை யாவுக்கும் அடிப்படை 'சாதி' வேற்றுமை. அவையில் 'தீண்டாமை' மிகக் கேடுபொருந்தியது. இது தமிழ்மக்களைப் பலவேறுகிளைகளாகப்பிரித்து அநேகரை நல்ல உண்டி யருந்தாது, நல்ல உடை உடுக்காது, நல்ல சாவகாசங்கிட்டாது, நல்ல கல்விபெறாது மறைந்து ஒதுங்கிப் பதுங்கி வாழ்ந்துவரச்செய்ததுமன்றி, அந்நியம் தங்களிலும் புகுந்துவிட்டது. இவ்விழிநிலைமையை யுணர்ந்த அபிமானிகள், சமூக முன்னேற்றத்திற்குரிய சீர்திருத்தங்கள் சில வேண்டுமெனப் பிரேரித்தால், உடனே குறுகுணக்குடைய வைதிகர்கள் 'சாதி போச்சு, சமயம் போச்சு, நாஸ்திகமாச்சு, மூலங்கெட்டது, ஆசாரங்கெட்டது' என ஓலமிடத் தொடங்கிவிடுகின்றார்கள்.

அங்ஙனமே 'அரசாங்கத்தாரிடம் பணச் சகாயம் பெற்றுவரும்பாடசாலைகளில் 'சாதி' வேற்றுமையின்றி எப்பிள்ளைக்கும் பேதங் காட்டாது சரிவரக் கல்வி யூட்டிவர வேண்டுமெனப் பிரேரித்தவுடன், இந்த வைதிகக் கூட்டத்தார் "செயற்கரி செய்வார் பெரியர் பசியர்- செயற்கரிய செய்கலாதார்" என்னும் பொய்யாமொழிப்படி தம் பரவணித் தொழிலைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள். அதை மறுத்து அரசாங்கத்தாருக்கு மனுப்பண்ணினதோடு நிற்காமல், பத்திரிகை வாயிலாகவும் மானம் மரியாதையின்றி வரைந்துவிடுகின்றார்கள். இவர்களுக்கு சமூக சமயாபிமானம், ஈவு, இரக்கம், மனுதத்தன்மை ஆகியன ஒன்றுமே யில்லையெனலாம். இவர்கள் பல்லாண்டுகளாயுள்ள மூடக்கொள்கைகளிலிருந்துமுளைத்தெழுந்த கொழுந்துகள். இவர்களின் பிடிவாதந்தான நமது சமூகத்தைப் படுகுழியில் வீழ்த்திவிட்டது. இவர்களின் மனம் விசாலமடைய, மனித உணர்ச்சியேற்பட முதல் இவர்களுக்கே கல்வியளிக்க வேண்டும்போலும் இச் சிறு கூட்டத்தாரின் பிடிவாதத்தைக் கவனியாது பொதுநன்மைக்குரியதாகிய இச் சிறுசீர்திருத்தத்தைச் செய்துவைக்க அரசாங்கப் பகுதியார் அங்கீகரித்து உதவி புரியவேண்டும் எச்சமூகத்துக்கும் கல்வியே உயிர். பிறவியாலாய பயன் எதுவென்பதை அறிவுறுத்துவதுகல்வி. மக்கள்உடலுக்கு உணவு எத்தகைத்தோ அத்தகைத்து மக்கள அறிவிற்குக் கல்வி. மனிதன் அறியாமையைக் கல்வி அறிவைவிளக்கி அவனது வாழ்வை நேர்மையில் செலுத்த வல்லது கல்வி.

"இம்மை பயக்கு மாலீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றூமுளராக-கேடின்றே
லெமமையுலகத்து மியாம்காணேங் கல்விபோல்
மம்மரறுக்கு மருந்து."

எனநாலடியார் கூற்று. ஆகையால் ஒடுக்கப்பட்டவகுப்பாரை ஈடேற்றும்வழி கல்வியே.

ஆங்கிலங்கற்று, மேனாட்டு நாகரீகவாடை சற்றாகிலுங் கமழப்பெற்ற சிலர் இசசீர்திருத்தத்துக் கெதிரிடையாய்க்கிளம்பினது மிகவும் வியப்பாயிருக்கின்றது. தாழ்த்தப்பட்ட சகோதரர் கூட்டத்தில் இவர்களை விவாகஞ் செய்து கொள்ளும்படி கேட்கவில்லை அவர்களின் சிறுமகாரை ஏனைய பிள்ளைகளுடன் சமமாயேற்றுக் கல்விகற்க விடும்படியே கேட்கப்படுகின்றது. இதற்கும் இவர்களது வைதிகம் விட்டுக்கொடுக்காவிட்டால், நமது சமூகம் முன்னேறும் வழிதானென்னே? அயல்நாடுகளின சரித்திரங்களைக் கற்றறிந்த பின்பும், அவர்கள் தமது சமூக ஊழல்களைக் களைந்து வேண்டிய சீர்திருத்தங்களைக் காலத்திற்கேற்றவிதமாய்த்திருத்தியமைத்து முன்னேறி வருகிறார்களென்பதைக் கண்டறிந்தபின்பும் இக்கூட்டத்தார் மேலும் தமது குறுகுணக்கில் பிடிவாதமாய்ச்சிற்பது மிகவும் விசனிக்கத்தக்கது. கால ஓட்டத்திற்கேற்ப, ஒவ்வோர் சமூகத்திலும் மாறுதல்கள ஏற்படுவதியல்பு. அவ்விதமே சைவசமூகத்தில் வேரூன்றின பழைய மூடக்கொள்கைகளையும் அதனாலேற்பட்ட இடையூறுகளையும் நீக்க ஓர் எழுச்சி உண்டாவதியல்பு. அது ஓர் நற்குறி. இவைகளில் 'தீண்டாமை' என்னும் அக்கிரமத்தை அகற்ற முயற்சிப்பது மிகவுஞ் சிறந்த நற்குறி. அதைப்பள்ளிக்கூட வாயிலாக முயற்சிப்பது இன்னுஞ் சிறந்தவழி. ஆகையால் எவ்வித சீர்திருத்தத்திற்கும் முட்டுக்கட்டை போடாமல் "பழையன கழிதலும் புதியன புகுதலும, வழுவலகால வகையினனே" என்றபடி கால ஓட்டத்தின்படி வைதீகர்கள் சிஞ்சிறிதேனும் பிடிவாதக் கயிற்றைத் தளரவிடவேண்டும். புதியன புகுதலால் சமூதாய வாழ்க்கை மாறுதல்களை அடைவது இன்றியமையாததாகும். காலத்தின் வழியும், புதியகருத்துகளுக்கேற்பவும பழையகொள்கைகளை மாற்றிப் புதியவற்றை யேற்றவாறு திருத்தியமைத்துக் கொள்வதே நற்குறியாகும். எனவே இவ்வாறு வேண்டுங்காலத்து மாறுதல்களைக் கைக்கொண்டும், புதிய நிலைமைகளுக்கேற்றவாறு, கொள்கைகளைத் திருத்தி யமைத்துக்கொள்ளும் ஆற்றலையுடைத்[illegible]யில்லாத சமூகம் விரைவில் இறந்தொழியு மென்[illegible]தன்மை ஐரோப்பிய நாடுகள் வைதீகக் கொடுமையை நீக்கின பின்பே மேனிலையடைய ஆரம்பித்தன. யப்பான் நாட்டிலுள்ள 'சாதி' வேற்றுமையும் சமூகக் கெடுதலகளும் நீக்கப்பட்டபின்பே, அந்நாடு முன்னேற்ற மடைந்தது; அன்றியும் ஐரோப்-

பிய வல்லரசுகளில் ஒன்றாகிய ருஷியாவைத் தகர்த்துத் தற்காலத்தில் உலகிலுள்ள வல்லரசுகளில் ஒன்றாயொலிர்கின்றது. துருக்கியில் தாண்டவமாடின வைதிகக் கொடுமைகளிலிருந்து அந்நாடு விடுபட்டபின், நாளொருமேனியாய்த் தலைசிறந்து மேனோக்கிவருகின்றது. அங்ஙனமே, நமதுநாடு, நமது சமூகம் நற்கதியடைய வேண்டுமானால், முன்னேற்றத்தைப் பாதிக்கும்ஒவ்வோர் தடையையும் நாம அகற்ற வேண்டும். ஆகையால் முற்றிப்பழுத்த சைவப் பழங்களாயிருந்தாலும் சொற்ப மனமிளகி, ஏனைய சகோதரர்மீது இரக்கம்வைத்து 'தீண்டாமை' நோயை சைவ சமூகத்திலிருந்து அகற்றிவிட உதவிபுரிவீர்களாக.

"தன்னுயிர் தான் பரிந் தோம்புமாறு போல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமின்.

ஜோகூர்பாறு
6-4-28

சமத்துவம்.

## பொதுச் சமாச்சாரம்.

### காலநிலை.

கடும் வெயிலும் புளுக்கமும் இடையிடையே மழைக்கோலமும் காணப்படுகின்றன. மழையில்லை. அடுத்த சில இடங்களில் மழை பெய்திருக்கிறதாக அறிகின்றோம்.

---

றங்கூனிலிருந்து நெல் ஏற்றிவந்த ஜலபுத்திரன் என்னும் கப்பல் பருத்தித்துறையில் 28,000 நெல்மூட்டைகளையும், காங்கேசன்துறையில் 40,000 நெல் மூட்டைகளையும் இறக்குமதி செய்திருக்கின்றதாம்.

---

சென்ற கிழமை பம்பாய் சமுதாய சமத்துவ சங்கத்தின் ஆதரவில் சுமார் ஆயிரம் தீண்டாதோருககு உபநயனம செய்து பூணூல் கொடுத்துக் காயத்திரி மந்திரமுங கற்பித்துவைத்தனராம்.

---

ஸ்ரீமதி. பார்பாரா என்ற அமெரிக்க கோடீஸ்வரி கென்னத்தென்ற ஒரு மாடு மேய்ப்போன்மீது காதல்கொண்டு அவனையே மணந்துகொண்டாளாம். அவளது காதலுக்கு அவனது ஆறடி உயரமும் அழகிய தோற்றமுமே காரணமாம்.

---

வங்காளத்தில் ஜாம்ஷெட்பூருக்கருகே ஒரு மைதானத்தில இறந்துகிடந்த ஒரு பசுவின்மீது ஒரு கழுகுவந்துட்கார்ந்து திறந்திருந்த அப்பசுவின் வாய்க்குள் கழுத்தைவிட்டுப் பலமாகக் குத்தியது. அதனால் திறந்திருந்த பசுவின் தாடை திடீரென்று மூடிக்கொள்ளவே கழுகு மூக்கையெடுக்க முடியாமல் இறந்துபோய் விட்டதாம்.

---

1930 ஆண்டில் இந்து முஸ்லிம் குழப்பம் ஒன்று உண்டாகும் என்றும், அதனையொட்டி இந்தியாவில் குடியாட்சி ஏற்படும் என்றும் என்றும் ஆமதபாத்தில் இருக்கும ஒரு மௌனச் சுவாமியார் கூறுகின்றாராம். இந்தச் சாமியாரின்குரு நேபாளததிலிருக்கின்றனராம். இவருக்கு 251 வயதாகிறதாம். இன்னும் இளமையுடன் வாழ்கின்றாராம்.

---

மோண்ட் கோமரியில் மேரிபாயிஸ்ட் எனபவள் நாற்பது வருஷத்துக்கு முன் தனது கணவன்மீது கோபம்வந்த காலத்தில் தான் படுக்கைக்குச் சென்று சாகும் வரைக்கும் அங்கேயே இருக்கப்போவதாகச் சபதங்கூறினாளாம், கடந்த நாற்பது ஆண்டும் அவள் அவ்வாறே படுக்கையைவிட்டு எழுந்திராமல 92-ம் வயதில் சமீபத்தில் காலஞ்சென்றுளாம்.

---

மயிலிட்டி தெற்குப் பாலர் ஞானோதய சங்க வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் கட்டுவன் அம்பலம் பொன்னையா என்பவர் 1928-ம் ஆண்டு சித்திரைமீ 11-ந் தேதி மல்லாகம பொலிஸ்கோட்டு நீதிபதிக்கு முன் பாலர் ஞானோதய சங்கக் காரியதரிசி க. பொன்னம்பலமென்பவரும் வேறு பலருமாகத் தனது அனுமதியின்றிப் பள்ளிக்கூடததில் கூட்டம் வைத்தார்கள் என்று முறைபிட்டார். நீதிபதி முறைப்பாட்டை ஏராமல் உமக்கு வழக்கு வைக்க உரித்திலலை என்பதாகச் சொல்லி வழக்கைத் தள்ளிவிட்டார்.

---

### புத்தகவரவு.

சாதித்தாயின் சிலம்பொலி யென்னும் சிறியநூல் ஒன்று வரப்பெற்றோம். இது திரு. கு சரவணமுத்து அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இதனகத்தே பல அரியபெரிய விஷயங்கள் பொலிவுறுகின்றன. இதன் விலைசதம் 10. இதனைப் பெறவிரும்புவோர் 12 சதம் பெறுமதியுள்ள முத்திரைகளை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். திரு. கு. சரவணமுத்து அவர்கள் திருவருள் நிலையம், வேலணை-மேற்கு (முகப்பு) என்றெழுதுக.

விவேகானந்தம் இது சென்னையிலிருந்து வெளிவரும் ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை 4-புத்தகம், முதலாம் சஞ்சிகை கிடைக்கப்பெற்றோம். இதன்கண் வியாபாரம், கல்வி ஒற்றுமை, சகோதரத்துவம் முதலிய அரிய விஷயங்கள் வெளிவருகின்றன. வருடசந்தா ரூபா. 1—00. மலாய் நாட்டுக்கு ரூபா 1—25. வேண்டுவோர் ஸ்ரீவிவேகானந்தம் ஆபீஸ் 145 மிமர் தங்கசாலைத்தெரு சென்னை என்று எழுதுக. மேற்படி நூல் ஆசிரியரவர்களுக்கும் பத்திராசிரியரவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

---

## நாற்றிசை நோக்கு.

### தேவாலயத்தில் இடிவிழுந்தது, 5பேர் கொல்லப்பட்டனர் 30 பேருக்கு அபாயம்.

திருவாலங்கூரைச் சேர்ந்த கொட்டையம் என்னுங் கிராமத்தில் அற்புதமான ஓர் சம்பவம் நிகழ்ந்தது. ஒரு கிறிஸ்த ஆலயத்தில் ஆராதனை நடந்துகொண்டிருக்கும் தருணத்தில், கூஷார் மேகம் ஒன்று கூடித் திடீரெனப் பயங்கரமான இடிமுளக்கம், மின்னல், ஒளியோடு ஆகாயத்தில் தொனித்தது. இதனைக் கண்ணுற்ற குருவானவர் மாதர்களையும், வயதாளிகளையும், மற்றுஞ் சிறுபிள்ளைகளையும், வெளியே அனுப்பிவிடுகிறது நலமென உத்தேசித்துக் கொண்டிருக்குஞ் சமையத்தில் ஆலயத்தின் உச்சியிலுள்ள கல்லானது இடியினால் தகர்ந்து சின்னபின்னமாகப் போய்விட்டது. குருவானவர் இடியினால் தாக்கப்பட்டு மூர்ச்சையற்றுக் கிடந்தார். மயக்கந்தெளிந்ததும் அங்குமிங்கும் சுற்றிப்பார்க்கவே சபையோர் எல்லோரும் பிரமையற்றுக் கிடப்பதைக் கண்ணுற்ற குருவானவருக்கு நடுக்கமும் திகிலுமுண்டாயிற்று. பின்னர்எல்லோரையும் பரிசோதிக்கவே 5 பேர்கள் உயிர் துறந்திருந்தார்கள். 30 பேருக்கு அதிகமானவர்கள் மயக்கத்திலிருந்தார்கள் என்றாலும் அவர்களுக்கு மறுபடியும் பிரமை வந்தது. ஆலயமுழுதும் சேதமடைந்தது; சுவர்களெல்லாம் பிளவுபட்டு அநேக அங்குலதூரம் வெடிக்கப்பட்டிருந்தனவாம்.

—"முஸ்லிம் நேசன்"

### பிரசவ ஸ்திரியின் வயிற்றில் பின்னுமோர் கல்சிசு.

ஏழரை இறுத்தல் நிறையுள்ள ஓர் ஆண் குழந்தையை ஓர் ஸ்திரி இணுவில் ஆஸ்பத்திரியில் பெற்றபின் வயிற்றுக்குள் வேறுமேதோ இருப்பதாகக் கண்டு பரிசோதித்துச் சத்திரவைத்தியம் செய்தபோது இரண்டு வருஷத்துக்கு முன்னுகக் கருத்தரித்திருந்த பெண்குழந்தையின் உருவம் கல்லாய்ச் சமைந்திருக்கக் கண்டெடுக்கப்பட்டதாம். இது ஓர் அற்புதமான சங்கதியென்றே கொள்ளவேண்டும்.

### விபவவருட தேதியட்டவணை.

கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலையிலிருந்து வெளியிடப்பட்ட விபவ வருடத் தேதியட்டவணைப் பிரதியொன்று வரப்பெற்றோம். இதன்கண் மாசம் தேதி வாரம் என்னுமிவைகளோடு ஒவ்வொரு மாசத்திலும் நிகழும் விசேஷ தினங்களும் பிறவும் குறிக்கப்பட்டுள்ளன. சிரமமின்றி யாரும் பார்த்து அவதானிக்கத் தக்கவிதமாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் பொருட்டு நன்றி கூறுகின்றேம்.

### மணமகனுக்கு வயசு 45 மணப்பெண்ணுக்கு வயசு 52.

மாஜி ஜெர்மன் சக்ரவத்தியின் இரண்டாவது மகன் ப்ரெட்ரிக் இளவரசர், ஜெர்மன் சர்க்கரைவியாபாரி ஒருவரின் மகளும் பெரும் செல்வியுமான ஷ்வார்ட்ஸ் என்ற ஒரு விதவையை மூன்றும் மனைவியாக மணந்துகொள்ளப் போகிறாராம். இரு மனைவிமாரை மணந்து பிரிந்த இளவரசருக்கு வயசு 45 மணப்பெண்ணுக்கு வயசு 52 அவள் முன் மூன்றுகணவரை மணந்திருந்தவளாம்.

---

### விபரீத விவாதமும் வஞ்சகர் சூட்சியும்.

ஐயா பத்திராசிரிய!

சென்றமாதம் 30-ந் தேதி வெளிவந்த 12-ம் இலக்கக் காவலனில் மணவனின் சிற்றப்பன் K. T. எனுங் கடிதன் K. T. இன் தந்தா விவாகமேன்னும் ஓர் கட்டுரை வரைந்துள்ளார் உள்ளபடியே அக்கட்டுரையின் மகுடநாமம் பின்தோன்றிய K. T. தன்பேரிற் சூட்டியதேன்பதை அறிவுடையோர் யாவரும் மறுக்கார் என்பதே துணிபு.

கண்டவர் நகைத்திட விண்டிடும்
பேற்றியர் இன்தேம் இதழ்கழை
ஏன் ஒளித்தனரோ.

யான் சொன்னவைகள் தப்பறையேன்று தன் அகம் கோணுதுரைத்தவர் எப்பறை யெடுத்திசைக்க எழுந்தனரேன்பதை வாசகர்களே ஊகிக்கவும். எனது மூத்தமருமகனுக்கு மேஸ 8. போலின் புத்திரியை விவாகம் செய்யும்படி கேட்டதாகவும் இவர் சொல்லும் பிரயோசனமற்ற போலி நியாயங்கள் எதுபோன்றவெனின் வேகிற வீட்டில் கழலைக் கொவியதை ஒத்தனவேயன்றி வேறன்று ஆனல் எனது மருமகனுக்கு யான் வேருண்டு ஓர் பருவமற்ற பாலிகைக்கு விவாக நோட்டீஸ் செய்ததாகக் கூறியுளளார் நோட்டீஸ் போட்டது உண்மையே அன்றி வேருண்டேன்பது யாங்ஙனம் வேருட்சியுற வேண்டிய நோக்கம் யாது. யாருஞ் சிற்றப்பன்போன்ற மதுக்குடியர்கள் திருப்தியாகப் பருகித் தெருவினில் விழுந்தும் உருண்டும் எழுந்தும் பாடிய பேப்பாட்டுக்காகவா, அன்றேல், யாராவது மலவாவி யெடுத்துவாககண்டு அதிலிருந்தெழுந்துர்நாற்றம் சகிக்கமாட்டாமலா, அன்றேல் உவேிலான் மல்லாகத்தில் நின்றடித்து வந்தபறையோலிக்கா, அன்றியில் வேறேதுவாக வேருண்டதேன்பது கடிதர் கருத்தோ எல்லாம் விபரீதம். காவலன் கடிதர் எங்கள் மேற்புனைந்த துந்திரவசை மொழிகள் போதாதேன நினைந்து திராவிடன் பத்திராசிரியரையும் போட்டிக்கிழுக்கிறர். திராவிடன் பத்திராசிரியர் இவர்களுக்கிழைத்த குறை தானென்னே உலகமெல்லா மிகழத்தக்கதாய் இவர்கள் புரிந்த விவாகமுறையைப் புகழத்தக்கதாய் மாற்றித் தம் பத்திரிகையில் ஓர் கட்டுரை வரையாததுதானே. அன்றேல் மேற்படி பத்திராசிரியரின் தங்கைக்கும் எனது இளையமருகனுகிய நாகநாதிக்குங் கலியாணம் பேசியதும் நாகநாதி மறுத்ததுமென்று பொருத்தியெழுதிய பொய்க்கருத்தை யாண்டாயினும் யாம் நினைந்ததுமில்லையே அப்படியிருக்கவும் கடிதர் எழுதிய புறுதாரையைக் குதிரைக்கார நாகனின் புத்திர பௌத்திரர்களே அன்றிப்! பேரறிவு படைத்த பெருந்தகையார் யாவராயினும் ஒத்துக கொள்வரா, கொள்ளவே கொள்ளார். நாகநாதியாகிய எனது மருகனைக் கல்வித்திறமையும் நுட்பபுத்தியு முள்ளவரேனவும் ஆசிரியர் சகபாடிகளாற் போற்றப்படுபவரேனவுஞ் சொல்வதோர் நூதனமாதுமா என்னுடைய மருகன் புத்திசாலியேன்பதை யார்தான் மறுப்பார் யாங்கள் பணச்செலவைப்பாராது கல்விபயிற்றுவித்த கருத்தேதை யுன்னிட்டேன்றுணர்ந்தனரோ.

அப்பேர்க்கோத்த அறிவாளியை யாராவது அனுப்புவதேங்ஙனமேனிற் கூறுவாம். அவரை வேறெவ்வித நுசிகாட்டியாயினும் பொருள் பண்டச் செல்வாக்கைக் காட்டியாயினும் அனுப்புவதென்றல் அரிதினுமரிதுதான். இப்போ இவர்கள் செய்துகொண்ட வகையே உலகில் மிகவும் எளிதான அனுப்பு வழியேனலாம் எவ்வகையெனில் பெண்வகையாதும் ஓர் பெண்ணின் அழகை மிகவும் வர்ணித்தோதியும் நேரில் காணபித்தும் இன்னோரன்ன இழிவுற்ற செயல்களால் வயதுடையவோர் வாலிபனைத் தம்வசமாக்குதல் கடினமோ, எளிதோ, அற்புதந்தானே, என்பதை அறிஞர் பாற் கேட்டுணர்க அனறியான் சொலலப் புகின் விரியும் நாகநாதியின் அண்ணனுகிய எனது மூத்தமருகனுக்கு ஓர் பருவமற்ற பாலிகையை விவாக நோட்டீஸ் செய்ததாகப் பரிகாசம் புரிந்தனர். நம் பண்டைக்கால வித்துவான்களாலும் மேல் நாட்டறிஞர்களாலும் புகழப்பெற்று வரும் ஒழுங்கானமுறையை வெறுத்து நாகநாதியின் வயசினும் வயசாற் கூடிய ஓர் பெண்ணுக்கு ஏதோ அவசரநிமித்தமாக அவரை மணாளனுக்கிப் பின்னுமெங்களை இகழுவதை உம்பாலிகளன்றி வேறேது வருமோத்துக் கோவளார் என்பதையுமுணர்க.

பசுத்தோலைப் போர்த்துப் பதிவிருக்குங் கடிதர் யான் என்னையும் எமமவரையும் ஏழைகளேனக் கூறியது உண்மையேன ஒத்துக கொண்டனராம். அங்ஙனமாயின் பலருமறியப்படுமோசஞ் செய்த நயவஞ்சகர்களின சூட்சியை உலகமறிந்துய்யும்படி ஒன்றையேனும் மாற்றதெழுதிய உண்மையை முற்றாய மறுக்க முயன்று காவலனைத் தம்படையாக்கி முன்வந்து ஊரை உலைமூடியால் மூடப்புகுந்தோர் பான்மையாயினர் இதுவுமோர் வபரீதம், "தெய்வத்தா னுகாதெனினுமுயற்சி தன் மெய்வருத்தக் கூலிதரும்" என்ற பொய்யாமொழியை ஏற்று எங்கள் சீவியத்தை உலகோரியக்க எளிதில் நடத்திவருமேங்களை சாழுவேல பவுல் மூலம் சீவியங்கழிப்பதாய் எழுதி மனப்பால் குடிப்பதுமோர் விநோதம்.

நாகநாதியை ஓர் சீமானுக்கியதுபோதாதோ வேனவினவியது பெரிய ஓர் வியப்பை உண்டுபண்ணிற்று. ஏனெனில் முன்னரும் இவர் போன்று தங்கள் இனத்தாரை விட்டுக் குதிரை மேய்த்துச் சீமானய் இருந்து காலஞ்சென்ற நாகர் பகுதியிற் பெண்கொள்ளப் புகுந்த, மருதர், காத்தார், முருகர், என்பவர்கள சீமான்களாக இருந்ததையும் இருப்பதையும் கண்ணாரக்கண்டுங் காதாரக்கேட்டும் இருப்பதால் இவரும் அவர்கள் பதத்தையே அடைவாரேன்று யூகிப்பதுமோர் விநோதமாதுமா.

K T. ஆகிய பசுத்தோலாற் போர்த்துப் படிக்கும் பிள்ளைகளைப் பாய்ந்து பிடிக்கும் நோக்கத்துடன் பதுங்கி இருக்கும் மனுப்புலிகள் வெளித்தோன்றி முன்வந்து தாங்கள் செய்துகொண்ட வஞ்சகச் சூழ்ச்சியை மனச்சாட்சியேன எழுதுவார்களானல் யானும் பலசாட்சிகள் கொண்டு வேதகாட்சிகளை அத்தாட்சியுடன் வரைவதற்குத் தாழ்ச்சி இன்றி இருக்கின்றனன்.

இங்ஙனம்,
K. T.
தேல்லிப்பழை.

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

திரிமூர்த்திகள்போன்ற இத்தலைமைக்காரர்காலத்திலே நடந்த கிஷ்கிரங்களையும் இக்குடிசனங்கள் பட்ட கஷ்டங்களையும் இஷ்டமாய் விரித்துரைப்பின் ஆகாயமண்டலத்தைக் கடதாசியாக விரித்து சமுத்திரநீரை மையாகக்கொண்டு இமயமலையைத் தூவலாகக்கொண்டு பாவித்து எழுதினும் எழுத முடியாது.

இவ்வித தலைமைக்காரர் வசித்த காலத்தில் அடங்காமாரியன் என நாமம்பூண்ட மடங்காத் தலையனான தட்டான் ஒருவன் இருந்தனன் இவன் சாதியளவிற் சிம்மகனாயினும் ஏழை எளியோரிடம் நகை செய்து தருகிறேனென்று மாய்மாலஞ்செய்து கண்டமட்டிற் காசுபறிக்கும் வஞ்சகக் கள்வன். ஆண்பிள்ளைகளில்லாத நேரம்பார்த்துப் பெண்பிள்ளைகளிடஞ்சென்று கன்னை, பொன்வகை கொண்டுவருகிறேனென்று நவதானியம் பணம் முதலியன இரகசியமாய் வாங்கிப் பின்னர் அவ்விடங்களுக்குப் போகாது கம்பிவாங்கும் விரியத்தம்பி. முக்காலே யரைக்காலேவிசம் வராகன் பொன்னுடன் மாகாணி பித்தளையைக் கலக்கும் பித்தலாண்டி தட்டானைத் தொட்டார் கெட்டார் என்னும் பழமொழிப்படி இவனிடம் சிக்கினவர் பட்டபாடும் கெட்ட கேடும் மெத்தமெத்த. இத்தட்டானே பெண்பேதைகளுக்கு மாயப்பொடி தூவும் மாய்மாலமாத்திரமன்றி, அவ்வூர்க் குடிமக்களை யேமாற்றி அவர் பொருள்பண்டங்களை யபகரிக்கும் தலைமைக்காரர் அக்கிரமங்களை மாப்பாணமுதலியார் பெருமகன் சடபுடசாமியுடன் கூடிப் பெட்டிசமெழுதி ஏசண்டருக் கறிவித்து மணியம் விதானைமாரைக் கலக்கியடித்துப் பயமுறுத்துங் காரிய வீரியன், எனவே இத்தட்டானைக் காணும் தலைமைக்காரர் யாவரும் கெருடனைக் கண்ட பாம்புபோற் பதுங்கி யொளிப்பர்.

இத்தட்டானுக்குச் சுந்தரவல்லி யென்னும் நாமம் பூண்ட சிங்கார மங்கை யொருத்தி யிருந்தனள். பூரணசந்திரனைப்போ லிலங்கும் பரந்த முகமும், மூன்றாம் பிறைபோ லிலங்கும் சிறந்த நெற்றியும், வீரவான்களுடைய கையிலே யிருக்கும் வில்லைப்போன்ற வளைந்த புருவங்களும், கருவிளம்புஷ்பம்போலே துலங்குங் கண்களும், செண்பகப்பூவை வென்ற மூக்கும், கொவ்வம்பழம்போன்ற அதரமும், முல்லையரும்புபோலும் பற்களும், கருப்பஞ்சாற்றை நிகர்த்த மதுர வாரகமுமுள்ள இம்மங்கையைக் கண்ணுறும் வாலிபர் யாவரும், தெய்வலோகத்திலே தெய்வேந்திரசபையிலே மதுர கானங்களைப் பாடும் ஊர்வசியோ மேனகையோ பூலோகம் வந்தனரென்று கடைக்கண்ணெறிந்து பார்ப்பர்.

ஒர் தினம் சடகோபாலகுரியர் கொடிகாமத்தாற் புறப்பட்டு முக்கு தாவடி கொக்குவில்மீது வரவே, உடுவிலா னொருவன் வந்தனன். வரவே பன்னாலையா னொருவன் எதிர்நோக்கி வந்து மணியத்தைச் சருவினன். அந்தவேளையில் மேற்கூறிய சுந்தரவல்லி ஆனைக்கோட்டை தாண்டி கருலகிரியிலே தீர்த்தமாடுமாறு தனது தந்தையாரும் அடங்காமாரியனுடன் இடபஜாதாருடராய் ஆடையாபரணங்களணிந்துவந்தனள். அடங்காமாரியன் மங்கையைக் கண்ட மணியமவர்களும் அத்தையல்மீது மையல்கொண்டனர். அன்றுமுதல் சுந்தரவல்லியை மணந்துகொள்ளுமாறு மணியமுங் கங்கணங்கட்டினர், அதுமாத்திரமா? சுந்தரவல்லி தன்மீது நேசம்வையாதிருப்பின் மந்திர தந்திர உபாயங்களால் அவளை வசியஞ்செய்யுமாறு மாந்திரிகருடன் ஆலோசிக்கலாயினர். மேலும் அவள் தன்னுடன் பட்சங்கொள்ளும்படி இரத்தினங்கள் பதிக்கப்பெற்ற பொன்னாபரணங்களையும், இளையாயிரம் பொன் பெற்ற பீதாம்பர உடைகளையும் தமது நேசத் தலைவராகும் புழுதிவிதானைமூலம் உபகாரமா யனுப்பினர். பெண்ணாசைகொண்ட சடகோபாலகுரியருடைய (கண்களைப்பகட்டும் பீதாம்பர உடைகளும் பளீர் பளீர் என்றிலங்கும் பொன்னாபரணங்களும்) பொன்னாசைகொண்ட சுந்தரவல்லி மனதைக் கொள்ளைகொண்டது மேற்கூறிய சுந்தரி புழுதிவிதானை கொடுத்த பண்டங்களை மறுது இரகசியமாய் வாங்கிக்கொண்டனள்.

அடுத்த சோமவாரத்தன்று தந்தா உடையார் ஜேஷ்டபுத்திரன் சுந்தரமூர்த்திக்குத் தாலிகட்டுக் கலியாணத்துக்கு கடுக்காய் முகூர்த்தத்துக்குப் பொன்னுருக்குந் தினமாதலின் அதே தினத்தில் அடங்காமாரியன் உடையார் வீட்டிலே தாலிக்குப் பொன்னுருக்கப் போயிருந்தான் இந்தச் செய்தியை யறிந்த மணியமும், சுந்தரவல்லியைத் தரிசிக்குமாறு தட்டான் வீடுசென்றனர். சுந்தரவல்லியும் மணியமவர்களின் வரவைக்கண்டாமகிழ்ந்தும் தனதெண்ணத்தை வெளிகாட்டாது மணியத்துடன் கடுகடுத்துப் பேசினள் மணியத்தின் வரவையும் அவர் மோசக்கருத்தையும் தந்தகப்பனறிய வரின் தனக்குப் பொல்லடி கிடைக்குமோ அன்றேல் கத்திக்குத்துக் கிடைக்குமோ வென்றும் அவள் மனம் கடுகடுத்தனள். சுந்தரவல்லியின் கடுகடுத்த வார்த்தைகளையும் வெடுவெடுத்த முகத்தையும் கண்ட சடகோபாலகுரியர் மனங்குன்றி வெளிநாடி மடமடென விடுநோக்கினர் தன தெண்ணங்கள் அநுகூலப் படாததைக் கண்ட மணியமவர்கள் சுந்தரவல்லிக்குப் பின்வருமாறு ஓர் கடிதம் விடுத்தார்.

(தொடரும்.)

## குணமாமணி.

2-ம் அத்தியாயம்.

(முற்றொடர்)

144-ம் நம்பர் மாளிகையில் மதுபானவெறியினல் அறிவிளந்த நிலைமையிற் காணப்பட்ட கந்தனும் சுப்பனும் ஒருவாறு தெளிந்து கேற்றின் சாவியைப் பார்க்கின்றார்கள். தங்கம்மாளை அங்குமிங்குமாக ஓடித் தேடுகின்றார்கள். கேற்றினண்டை பார்க்கின்றார்கள். கேற்றுப் பூட்டப்பட்டிருப்பது கண்டு நாணமுறுகின்றனர். விடியற்காலமாய்விட்டது. முன் சென்றுகொண்டிருந்த தங்கம்மாள் அதி விரதவுடன் பாதையை நோக்கி நடந்துகொண்டே யிருக்கின்றாள். தற்சமையம் எதிராக ஒரு பெண் வந்துகொண்டிருக்கின்றாள். சுமார் வயசு 24க்கு மேலாகவே மதிக்கவேண்டும். உண்மையளவில் பெண்ணல்ல. இருவரும் பாதையோரமாகவே நின்று ஒருவரையொருவர் விசாரிக்கின்றனர்

இப்பொழுது சத்தியநாதனையும் சுந்தரியையும் கவனிப்போம். கண்ணே! சுந்தரி! நீ கூறியவைகளனைத்தும் உண்மையெனக்கொண்டாலும் "மகாத்மா அவர்களின் போதனையை அநுசரிப்பதற்கு யான் தகுதியுடையேன் அல்லேன் என்பதும் மகாத்மா யாழ்ப்பாணம் வந்திருந்தபொழுது பிரபுக்க ளனேகர் செய்துகொண்ட ஏற்பாடு என்னவென்றால் ஏனைய பரதேசித்துணிகளைத் தமது கைகளினலும் தொடுவதில்லையென்றும் கதர்ப் புடவைகளையே பாவிப்பதென்றும் தங்கள் குடும்பங்களிலும் கதர்ப்பிடவைகளையே பாவிப்பதென்றும் சொல்லியது கண்ணால் கண்ட உண்மை இப்பொழுது அக்கொள்கைகள் பஞ்சாய்ப் பறந்துவிட்டன. அங்ஙனமெல்லாமிருப்ப எங்களின் கொள்கைகளை எடுத்துப் பேசுவது அனாவசியம். இருந்தும் சுந்தரி நான் கடைசியாகக் கூறுவதைக் கவனித்துக்கொள். உன் தகப்பனின் எண்ணமும் தாயாரின் கொள்கையும் உனது ஏற்பாடும் அறிந்துகொண்டேன். உன் பெற்றோரின் சம்மதமின்றி உன்னை மணம் முடித்துக்கொண்டவனாக ஊரார் எண்ணப்படுவதற்கு உடன்படமாட்டேன். நீயொரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவளாயிருந்தும் அக்கொள்கைகளை முற்றாய்த் தவிர்த்திருப்பது உண்மையேயாயினும் உன வசிகாரத்தை மாத்திரம் விரும்புவதனால் தீராத வசைமொழி ஒன்று வளர்ந்துகொண்டே வருமென்பதற்கையமில்லை.

ஏனெனில், கிறித்தபெண் ஒருத்தியை யாரோ இந்துசமய வாலிபன் களவாண்டு கொண்டானாம்; என்றும் இதுபோன்ற எத்தனையோ வசைமொழிகள் வந்துகொண்டே யிருக்கும் ஆகையால் இது விஷயத்தில் ஒரு முடிபு வரவேண்டும் என்பதற்காகவே இவ்வளவும் கூறிவிட்டேன்; இனி உனது எண்ணத்தையே எதிர்பார்க்கின்றேன் என்றனன் சத்தியநாதன்.

இதனைக்கேட்ட சுந்தரி சொல்லுகின்றாள்.

நாத! தாங்கள் இங்கு கூறிய இன்மொழிகள் யாவையும் அன்புடன் ஏற்றுக்கொண்டேன்; இருந்தும் எனது வசிகாரத்தில்மாத்திரம் என்னை விரும்புவதினால் தீராத வசைமொழிக்குள் அகப்படவேண்டிவருமெனக் கூறினீர்களே? பாருங்கள் தங்களின் வசிகாரத்தை மாத்திரம் விரும்பினேனேயன்றி, பின் எதனையும் சிந்திப்பவளல்ல, எனது வசிகாரத்தை தாங்கள் விரும்பாவிடின் எனது உலகசீவியம் இன்றோடு முடிவடைந்து விட்டதென உறுதிப்படுத்துகின்றேனென்றனள்.

இதனைக்கண்ட சத்தியநாதன் வெகுண்டு கண்ணே! சுந்தரி! யான் கூறியவைகளைத் தப்பான மார்க்கத்தில் கொள்ளவேண்டாம். சின்னாப்பிரித்த சீவியம் இவ்வுலகத்தில் அனாசிவிஷம் நிற்காது இது உண்மையான முடிபு. இருந்தும் கண்ணே! யான் சொல்வதை உற்றுநோக்கு?

அதாவது ஒருபெண்ணுக்கு ஒரு நாயகனைத் தேடிக்கொள்வதே வழக்கம். அதிலும்பார்க்கத் தாயானவள் செல்வமுள்ளவனையே விரும்புகின்றாள்; தந்தையோ கல்வி உத்தியோக முதலியவற்றையே விரும்புகின்றார்; சுற்றத்தினரோ குலநலமுள்ளவனையே விரும்புகின்றனர். பெண்ணோ கைநிறைந்த பொருளினும் கண்நிறைந்த கணவனே காட்சியென்று அழகும் குணமுமுள்ள ஒருவனையே விரும்புகின்றாள் இவ்வாறாகவே அனேக பெண்களின் மனதிற்கு விரும்பாத கல்யாணங்களே நாட்டில் நடைபெறுகின்றன. இவ்வித மணங்களினாலேயே சில குடும்பங்களில் அன்பின்றி ஒற்றுமையின்றி அடிக்கடி சச்சரவும் மனக்குரோதம் முதலியவைகளுடனே வாழ்ந்துவருகின்றனர். அன்புமொற்றுமையுமின்றிவாழும் இல்லறம் எவ்விதம் நல்லறமாகும்! சுந்தரி இவைகள் யாவற்றையும் ஆலோசித்து விவாக விஷயத்தில் பெற்றோர் முதலியோரைத் திருத்தி உனது விவாகத்தை முடிவுசெய்துகொள் யான் சென்று வருகின்றேனெனச் சொல்லி இருவரும் பிரிந்து தங்கள் இல்லம் செல்கின்றனர்.

(வரும்)

## செல்வம்.

"கல்வி வேண்டிற் கண்ணீர் சுகிக
செல்வம் வேண்டிற் பானைப் பணிக."

நாம் செல்வமடைய விரும்பிடில் ஒருவர் பொருளை ஒருவரிச்சித்தும், ஒருவரைக் கொலைசெய்தும், ஒருவர் வீட்டிற்கு நெருப்பு வைத்தும், ஒருவர்பொருளைத் தட்டியெடுத்தும், ஒருவரின் காணி புறதியை ஒருவர் களவாண்டு கள்ளக் கையொப்பமிட்டு ஈடுவைத்தும், இவ்விதமான வினையதுரோகங்கள்செய்து சேகரிக்குஞ் செல்வமென்ன செல்வமா? அச்செல்வம் நிலைநிற்குமா? அஃது கடவுளுக்கு ஏற்குமா? அந்தோ! இவ்வித கேள்விகளுக்கு மறுமொழி சொல்லப்புகின் இக்கொடிய துரோகங்களினற் பொருளைச் சம்பாதிப்பதைப் பார்க்கிலும், இவ்வுலகவாழ்வை வெறுப்பது மிகவும் நன்மையெனவே புகலவேண்டும். ஆகையால், "தோட்டிபோ லுழைத்துத் துரைபோற் சாப்பிடவேண்டும்" என்பதை எமதிதயத் திருத்துவோமாக. இதைமுன்னிட்டு அநேக வறியோர் தம் சீவியகாலம் முழுவதுங் கஷ்டப்பட்டுழைத்தும், "வரவுக்கு தகுந்த செலவு" எனப் பாவியாது வீணே பணத்தை அள்ளி இறைத்துக் கடைசியிற் றம்தேடிய பொருளுமிழந்து முன்னிலைமையிலுங் கேடாய்வாழ்கின்றனர். இதைக் கண்ணுற்ற வனேகர் முயற்சியின்றி வீணிற் றங்காலத்தைச் செலவிடுகின்றனர். நண்பர்களே! "முயற்சியுள்ளார் இகழ்ச்சியடையார்" என்பதை உள்ளி

"தெய்வத்தா னாகாதெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்பனபோன்று யாதொரு பொருளைத் தேடியெடுப்ப தருமையோ அவற்றைத் தேடியெடுக்கவேண்டும் "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்பதால், ஒருவர்பொருளைத் தட்டியெடுத்துச் சேகரிக்கவேண்டாம். பொய் களவு முதலிய பாவநெறியால் பொருள் தேடவேண்டாம். தேடிய பொருளை வீணிலே செலவழியாது காப்பாற்றவேண்டும் காப்பாற்றுவதென்றால், தருமத்திலே செலவழியாமலும், வீட்டில் வரும் விருந்திற் கழுதளியாமலும், தம் சீவியத்தை ஒழுங்காய் நடத்தாமலும் இருக்கவேண்டாம். "உண்ணச் சோம் மண்ணைப் போம், "உடாப் புடைவை நீயாப்போம்" என முதுமொழியும், 'விருந்தில்லா வீடும் விழல்" என ஔவைப்பிராட்டியார் திருமொழியும் இற்றைக்கும் வழங்கிவருகின்றதன்றோ.

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்
தோம்பி, மிச்சின் மிசைவான் புலம்"

என்னும் அமிர்த வாக்கைச் சிரமேற்கொண்டொழுகிடில் அத்தனும் அருண்மழைபொழிவானென்பதை நாமுங் கட்கெடுத்தோதவும்வேண்டுமா? இன்னும் "அழகேசனானாலும் அளவறிந்து செலவு செய்யவேண்டும்" இதை யசற்றிப் பொய்வழக் குரைப்பதும், தாசிவீடேகுவதும், மதுபான மருந்துவதும், இவ்விதமான கொடிய செயல்கள் புரிவதினலும், கலியாணம், திருவிழா முதலிய கொண்டாட்ட தினங்களில், வீண் செலவு செய்வதினாலும், எத்தனையோ கோடாகோடி சீமான்கள் தம் நிலைபரமிழந்துபோய்,

"ஆனமுதலில் அதிகஞ் செலவானால்
மானமழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் எழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"

என்ற பான்மையாய் முடிகிறார்கள். சகோதரரே! தேடிய பொருட்களைப் பாழாக்காமலும், வீண் செலவுசெய்யாமலும், நடந்து சிறுஞ்சிறப்பும்பெற்று வாழ்தாலன்றோ யாவரும் நன்குமதிப்பார். "கூழ்குடித்தும், பல்லீர் கொப்புளிக்கும்" வீணர்போல், குடுமிகேற்ற கொண்டைபோட்டு, விருதுக்கு வேட்டையாடுவதினால், டாம்பீகரெனப் பெயரெடுப்பதேயன்றி, மேன்மக்களெனப் பெயரெடுக்கமுடியுமோ? முடியவே முடியாது. இதனால், "ஆடுகின்ற நீரிலகப்பட்ட துரும்புபோல" அவ்விடம் பாசாரிகளுடைய அசற்று தனிக்குமென்பதை யார்தான் மறுக்கப்போ வல்லார். இன்னும், வரவுக்கு மேற்பட்ட செலவுசெய்து சீவிக்கவிரும்புவோர், களவு முதலிய பாவச்செயல்களைச் செய்துகொள்கின்றனர். அன்றேல், கடன்வாங்கத் தலைப்படுகின்றனர். கடன்பட்டுத் தலைப்பட்டவர் கடனெடு கடனாக மேலும் மேலுங் கடன்வாங்கிக் கண்ணை மூடிக்கொண்டு, "ஊரார்வீட்டு செய்யே என் பெண்டாட்டி கையே" எனக் கண்டபடி செலவழிக்கின்றனர் "கடன் வாங்கும்போது இனிப்பு, கடன் கொடுக்கும்போது கசப்பு" என்ற பான்மையாய், கடன் கொடுக்க இயலாது பின், கலக்கமடைகின்றனர். "கடன் வாங்குபவர் கடைத்தேறமாட்டார்" என்பதும், மாமேறிக் கைவிட்டவனும், கடன்பட்டுக் கடன் கொடுத்தவனுங் கெட்டான். என்பதும் முதியோர் வாக்கு. ஆகையால், கடனில்லாச் சோறு கால்வயிறு போதும்" என்பனவாய் உங்கள் செலவை ஒறுத்து நடவுங்கள். "ஒருவன்பாற் கடன்படும் பழக்கம் உண்டாயிருப்பின், அவன் பாற் பொய்யுரைக்கும் வழக்கமும் உண்டாகிவிடுகின்றது, என்பது கற்றுணர்ந்த மேதாவிகளின் கொள்கையாதலால், கடனே எல்லாப் பாவங்களையுமழைத்து வருவதற்கு ஓர் பெருந் தரணுய் விடுகின்றதெனவும் புகலலாகுமே. ஆதலால், கடன்படாமற் சீவிப்பதுவே மிகவும் மேன்மை. தற்காலத்திலநேகர், கடன்பட்டாலன்றிச் சீவியம் நடாத்த இயலாது வாழ்கின்றனராகையாலிவர்கட்குஞ் சில கூறுவாம்.

(வரும்)

இங்ஙனம்,
M. P. A.
பலாலி.


### விசேஷ அறிவிப்பு.

பியானோ, லில்லிபுளூற், பிடில், ஆர்மோனியம, கிரமபோன முதலிய சகல வாத்தியங்களும், கடிகாரங்களும் திருத்திக் கொடுக்கப்படும. மேற்கூறிய கருவிகளுக்கும் தேவையான எந்தச் சாமான்களும் விலைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

கே. எஸ். இரத்தினம்,
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

### எஸ். கே. லோட்டன் அன்டு கோ.

பறங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காலஞ்சென்ற ஸ்ரீமான் க. லோட்டன் காலம்தொடங்கி, நாங்கள் புகைப் படம் எடுத்து வருகிறோம். உங்களுக்கு உங்களைப்போல காண விருப்பமிருந்தாலும அல்லது மற்றும் பட்சமுள்ளவர்களை நேரிற் காண விருப்பமிருந்தாலும் செய்வதென்ன?

எங்களுக்கு ஓர் கார்ட்டு எழுதி அறிந்து கொள்ளவும்.

மானேஜர்,
S. K. லோட்டன் & Co.

### ஓரியன்டல் ஸ்டோர்ஸ்.

பெரியதெரு, யாழ்ப்பாணம்.

எங்களுடைய இதர வியாபாரங்களுடன், பலபேர் வேண்டுகோளின்படி வீட்டிற்கு வேண்டிய கதிரைகள், கட்டில்கள், மேசைகள், அலுமாரிஸ்கள பொதுவாக வீட்டிற்கு வேண்டிய எல்லாவித மரச்சாமான்களும், எங்களுடைய யாதிரகளைக்கொண்டு திறமான தச்சர்களால் கொழும்பில் செய்வித்து யாவரும் விரும்பும் படியாயும் யாவரும் வாங்குவதற்கேற்ற விலைகளில் விற்கின்றோம்.

ஒருதரம் வந்துபாருங்கள்.

வ. அ. துரையப்பா,
Proprietor.

### யாழ்ப்பாணம் அப்போதிக்கரீஸ்.

(பொன்னுச்சாமி ஷாப்)
பெரியதெரு, யாழ்ப்பாணம்.

பட்டணத்திற்கு சாமான் வாங்கவந்தால் பிற கடைகளின் விலைகளை அறிந்திருந்தாலும் எங்கள ஷாப்பின் விலைகளையும சாமான்களையும் ஒத்துப்பார்த்து வாங்கவும.

பலவிதமான வேஷ்டிகள .சால்வைகள் ஷர்ட்ச்சிலைகள் மற்றுமுள்ள எல்லாச் சாப்பு சாமான்களும் நேரிலும், பிரத்தியேகமான ஏஜன்டுகள மூலமாகவும் வரவழைத்து விற்கின்றோம்.

டாக்குத்தர்களால் குறிக்கப்பட்ட எல்லா விதமருந்துவகைகளும், எங்கள்மருந்துச்சாப்பு பிரிவில, நற்சாட்சிப பத்திரம் பெற்ற ஆட்களைக்கொண்டு, விலை சாசமாயும், கலைசகமின்றியும், தயாரித்துக் கொடுக்கப்படும் எல்லா பேட்டன்ட்மருந்துகளும்கிடைக்கும்.

Dr. S Ponnusamy,
Proprietor & Manager.

### தனலட்சுமி புத்தகசாலை.

அன்பார்ந்த வித்தியாபிமானிகளுக்கு அறிவிப்பது:—

இப்புத்தகசாலையில் சகலவிதமான பள்ளிக்கூடப் புத்தகங்களும் பள்ளிக்கூடங்களுக்கு வேண்டும் மற்றுஞ் சகல சாமான்களும் "யாழ்ப்பாணம் ஆரியத்திராவிட பாஷாபிவிருத்திச்சங்க" பரீட்சைக்குரிய புத்தகங்களும் ஆசிரியர் பிரவேச பரீட்சை, இரண்டாம் மூன்றாம் தராதரப்பத்திரம் பெறுவோர்க்குரிய புத்தகங்களும் இதர நூல்களும் கிடைக்கும. வேண்டியவர்கள் நேரிலும் வீ. பீ. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்களுக்குத் தக்க கழிவு கொடுக்கப்படும்.

தனலட்சுமி புத்தகசாலை,
சுன்னாகம்.


Printed by V. M. Kandiah for and on behalf of the Jaffna Depressed Classes Association Cunnagam & published at the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna.

Printed V. M. Kandia[h]
Chunnakam
Saiva Prakasa Pr[ess]